P.R.No: 23 நாள்: 08.08.2017

## திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் செய்தி குறிப்பு

### இரசாயன வர்ணம் பூசப்பட்ட விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் விநாயகர் சிலைகள் கரைக்க வேண்டிய இடங்கள் அறிவிப்பு

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தியின் போது களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை பூஜித்த பிறகு நீர்நிலைகளில் கரைக்கப்படும் வழக்கம் உள்ளது. ஆனால் அண்மைக் காலமாக பிளாஸ்டர் ஆப் பாரிசினால் செய்யப்பட்டு இரசாயன வர்ணப் பூச்சுகளுடன் கூடிய விநாயகர் சிலைகளை சிலர் வழிப்பட்ட பின்னர் அவற்றை நீர்நிலைகளில் கரைப்பதால் நீர் நிலைகள் மாசுபடுகின்றன.

எனவே, பொது மக்களுக்கு கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

- களிமண்ணால் செய்யப்பட்டதும் / சுடப்படாததும் மற்றும் எவ்வித இரசாயனக் கலவையற்றதுமான கிழங்கு மாவு மற்றும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி தொழிற்சாலை கழிவுகள் போன்ற சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்கலாம்.

- நீரில் கரையும் தன்மையுடைய மற்றும் தீங்கு விளைவிக்காத இயற்கை வர்ணங்களையுடைய விநாயகர் சிலைகளை உபயோகிக்க வேண்டும். இரசாயன வர்ணம் பூசப்பட்ட விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

- திருநெல்வேலி மாவட்டத்தில் விநாயகர் சிலைகள் கரைப்பதற்கு கீழ்காணும் நீர் நிலைகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

### விநாயகர் சிலைகள் கரைப்பதற்காக கண்டறியப்பட்ட நீர்நிலைகள்

| வரிசை எண் | இடம் | கரைக்கும் இடம் |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி நகரம் | தாமிரபரணி ஆற்றில், குறிச்சி, வண்ணார்பேட்டை, பேராட்சி அம்மன் கோவில், மணிமூர்த்திஸ்வரம். |
| 2. | செங்கோட்டை | குண்டாறு |
| 3. | அச்சன்புதூர் | அனுமான் ஆறு |
| 4. | ஊத்துமலை | பாபநாசம் தாமிரபரணி ஆறு |
| 5. | ஆலங்குளம் | பாபநாசம் தாமிரபரணி ஆறு |
| 6. | வாசுதேவநல்லூர், சிவகிரி | ராயகிரி பிள்ளையார் மந்தை ஆறு |
| 7. | கடையநல்லூர் | மேல கடையநல்லூர் குளம் |
| 8. | திருவேங்கடம் | வேம்பார் கடற்கரை |
| 9. | திசையன்விளை, நாங்குநேரி, திருக்குறுங்குடி, களக்காடு, மூன்றடைப்பு, பழவூர், இராதாபுரம், பணகுடி, விஜயநாராயணம், வள்ளியூர் | உவரி கடற்கரை |
| 10. | நாங்குநேரி, மூலக்கரைப்பட்டி, களக்காடு, சுரண்டை | பாபநாசம், தாமிரபரணி ஆறு |
| 11. | முன்னீர்பள்ளம், பாளையங்கோட்டை | சிவன்கோவில் குளம் |
| 12. | வீரவநல்லூர், திருப்புடைமருதூர், பாவூர்சத்திரம் | பாவூர்சத்திரம் குளம், திப்பனம்பட்டி குளம் |
| 13. | சங்கரன்கோவில் | தாமிரபரணி |
| 14. | கல்லிடைக்குறிச்சி | தாமிரபரணி ஆறு |
| 15. | அம்பாசமுத்திரம் | பாபநாசம் தாமிரபரணி ஆறு விக்கிரமசிங்கபுரம் |

மேற்குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே விநாயகர் சிலைகளை கரைக்க வேண்டும். மேலும், விநாயகர் சிலை தயாரிக்கும் நபர்கள் மாவட்ட நிர்வாகத்திடம் தாங்கள் தயாரித்த சிலைகள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் (Eco – Friendly) தயாரிக்கப்பட்டது என்று சுய சான்றிதழ் சமர்பிக்க வேண்டுமாறும், விநாயகர் சதுர்த்தியை பாரம்பரிய வழக்கப்படியும் சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கொண்டாடுமாறும் திருநெல்வேலி மாவட்ட பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மாவட்டம்.

வெளியீடு.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.